## In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 47/2022** **Date:23.02.2026.**

**(PW1)- முகமது சாஜஹான்**

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. நான் எனது பிராதில் குறிப்பிட்டுள்ள விவரங்களை தான் முதல் விசாரணையிலும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் எனது பிராது 3 வது பத்தியில் எனது அப்பாவின் இறப்பிற்கு பின்பு தபசில் சொத்தை நானும் எனது அம்மா மற்றும் பிரதிவாதிகள் பிரிந்தது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து நானும் எனது அம்மா மற்றும் பிரதிவாதிகள் எப்போது வாய்மொழியாக பிரித்து கொண்டோம் என்றால் பிரிக்கவே இல்லை. அவ்வாறு சொத்தை பிரித்துக் கொண்டோம் என்று பிராதில் குறிப்பிட்டு இருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் எனது மனைவிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவண எண் 4186/2016 என்ற ஆவணத்திலும் தாவா சொத்தை வாய்மொழியாக பிரித்துக்கொண்டோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. மேற்கூறியவாறு மேற்படி வா.சா.ஆ.6 ஆவணத்தில் குறிப்பிட்டு இருந்தால் அது தவறு என்றால் அவ்வாறு குறிப்பிடவில்லை (சாட்சி ஆவணத்தை பார்த்து பதில் அளிக்கிறார்). அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.6 ஆவணத்தில் எனது அம்மா மற்றும் சகோதரிகளுக்கு உரிமை உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அனுபவம் உரிமை மட்டுமே உண்டு ஆனால் சொத்தை பிரிக்கவில்லை. வா.சா.ஆ.1 ஆவணம் எனது அம்மா எனது சகோதரிகளுக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் எனது அம்மா எழுதிக்கொடுக்கவில்லை என்று நான் தாக்கல் செய்யயவில்லை என்றால் சரிதான், அவருக்கு அதிகாரம் இல்லை என்று தாக்கல் செய்துள்ளேன்.

3. ஒரு முஸ்லிம் ஆண் இறந்தால் அவரது சொத்தில் அவரது மனைவிக்கு 1/8 பங்கு உரிமை ஏற்படும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணப்படி நான் எவ்வளவு சொத்தை நான் எனது மனைவிக்கு எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் 1.5 செண்ட் முழு சொத்தையும்

எழுதிக்கொடுத்துள்ளேன். மேற்படி ஆவணப்படி நான் 875 சதுர லிங்ஸ் சொத்தை தான் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். ஒரு முஸ்லிம் ஆண் இறந்தால் அவருக்கு ஒரு மனைவி, மகன் மற்றும் இரண்டு மகள்கள் இருக்கும் பட்சத்தில் மனைவிக்கு 1/8 பங்கு போக மீதம் உள்ள சொத்தில் , மகனுக்கு 2 பங்கும், மகள்களுக்கு தலா 1 பங்கும் பிரியும் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு தான் வா.சா.ஆ.6 அவணத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அதன்படி எனக்கு 675 சதுர லிங்ஸ் சொத்து தான் உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

4. நான் அதிக சொத்தை காட்டி வா.சா.ஆ.6 ஆவணத்தை எழுதி இருப்பதால் அந்த ஆவணம் செல்லாத ஆவணம் என்றாலும், நடைமுறைக்கு வராதா ஆவணம் என்றாலும் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் சொத்து பிரிவின்றி எழுதிக்கொடுத்துள்ளேன் என்றாலும் மேற்படி சொத்தை பாக பிரிவினை செய்தால் மட்டுமே அனுபவம் செய்ய முடியும் என்றால் சரியல்ல. வழக்கிலும் தாவா சொத்தாக 1.5 செண்ட் முழு சொத்தையும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் ரத்து செய்ய கேட்கும் ஆவண சொத்தை தான் நான் தபசில் சொத்தாக சேர்த்து இருக்க வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் வழக்கு பரிகாரத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் எனது வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

5. எனக்கு எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் 2002 ல் திருமணம் நடந்தது. யாருடன் திருமணம் நடைபெற்றது என்றால் ஷாதிகா என்ற பெண் உடன் நடைபெற்றது. நான் குறிப்பிடுவது போல் ஷாதிகா என்ற பெண் உடன் திருமணம் நடைபெற வில்லை என்றாலும் தங்கம் என்ற பெண் உடன் தான் திருமணம் நடைபெற்றது என்றாலும் தங்கம் என்ற பெண்னை மதம் மாற்றம் செய்து இஸ்லாமிய முறைப்படி திருமணம் செய்தேன். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் மேற்படி திருமணத்தை நிரூபிக்க நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

6. நான் குறிப்பிடுவது போல் பெயர் மாற்றம் செய்ததை நிரூபிக்கும் பொருட்டு நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை தாக்கல் செய்ய எந்த வழக்கு மூலமும் இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனது வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது தாயார் எழுதிக்கொடுத்த ஆவணம் சட்டப்படி நிலைக்கதக்க ஆவணம் என்றால் சரியல்ல. நான் எனது அப்பாவின் சொத்தில் உரிமை கோர எந்த உரிமையும் இல்லை என்றாலும் ஒரு முஸ்லிம் ஆண் இறந்தால் அவரது கடன் மற்றும் ஈமை சடங்குகள் அனைத்தும் அடைத்தபிறகு அவரது சொத்தில் மீதம் இருந்தால் மட்டுமே அதில் பங்கு கோர முடியும் என்றால் சரியல்ல. நான் மதம் மாறி சென்றதாலும், வீட்டை விட்டு பிரிந்து சென்றதாலும் எனது அப்பாவின் சொத்தில் எனக்கு எந்த உரிமையும் ஏற்படாது

என்றால் சரியல்ல. எனது வழக்கு பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யபடவேண்டியது என்றால் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**